அறத்தான் வருவதே இன்பம்

# தமிழ் அறம்



உள்ளே...


ஆசிரியர் தலையங்கம் .................................. 1

நெஞ்சமே அஞ்சாதே நீ!

யார் செய்வார்?..................................................2

இல்லறம் இனிக்க................................................3

மக்கள் சக்தி இயக்கம் .................................... 5

கவிதைகள். .......................................................... 6



சிந்தனை 8 செயல் 1 ஆசிரியர் மரு.த.இராசலிங்கம் டிசம்பர் 2025

**பண்புள்ள தமிழ்நெஞ்சங்களுக்கு வணக்கம்!**

## உயர்கல்வி கற்போர்-கடமையும், கட்டுப்பாடும்.

அண்மைக் காலத்தில் நாம் அடிக்கடி கேள்விப்படுகின்ற செய்தி, உயர்கல்வி பயிலும் மாணவர்கள் பலர் கார் விபத்தில் மரணம் அடைகின்ற செய்தி!. உயிரிழப்பை ஏற்படுத்துகின்ற இந்த விபத்துக்குப் பின்னால் இருக்கின்ற காரணங்களை நினைத்துப் பார்த்தால் ஒரு பக்கம் வேதனையாகவும், இன்னொரு பக்கம் வெட்கமாகவும் இருக்கின்றது.

இரவு நேரத்தில் குறிப்பிட்டக் காலக்கெடுவுக்குள் விடுதியில் இருக்க வேண்டிய மாணவர்கள், விருந்து என்ற பெயரில் உணவு விடுதிகளிலும், கேளிக்கை விடுதிகளிலும் நள்ளிரவு வரை மது அருந்திவிட்டு, போதையுடனே வாகனத்தை ஓட்டிவந்து விபத்துக்குள்ளாகி, தம் இன்னுயிரை இழக்கின்றனர். அவர்களின் உயிர் மட்டுமா பறிபோகின்றது? குடும்ப மானமும் அல்லவா பறிபோகின்றது?

உயர்கல்வி கற்பதற்கு வாய்ப்பு கிடைப்பதே அரிது, கல்லூரிக்குச் செல்வது படிப்பதற்கா ? அல்லது குடிப்பதற்கா ?. எத்தனை எத்தனை வண்ணக் கனவுகளுடன் பெற்றோர் அவர்களைக் கல்லூரிக்கு அனுப்பியிருப்பார்கள்?. ஒழுக்கம் தவறியச் செயல் ஒரு நொடியில் அனைத்தையும் நாசமாக்கிவிடுகிறதே!.

சமுதாயத்தில் உள்ள அனைவரும் கூரறிவு உடையவர்களாக, நுட்பமானக் கல்வியறிவு பெற்றவர்களாக விளங்க முடியாது. அவர்கள், பிறர்க்கு எடுத்துக்காட்டாக வாழாமல் இருப்பது ஒன்றும் குறையல்ல. ஆனால் சில கூடுதல் தகுதிகளால் உயர்கல்வி கற்கும் வாய்ப்பைப் பெற்றவர்கள், கற்றவர்கள் பிறர்க்கு எடுத்துக்காட்டாக விளங்க வேண்டிய கடமை உள்ளது. அந்தக் கடமையிலிருந்து விலகியிருக்க முடியாது. நாட்டை வழிநடத்துவதில் தலைவர்களுக்குப் பொறுப்பும், கடமையும் இருப்பது போல், சமுதாயத்தில் நல்லதைப் போற்றித் தீயன விலக்கி மக்களின் பண்பாட்டையும், நாகரிகத்தையும் தீர்மானிப்பதில் கற்றவர்களுக்கு மிகப்பெரிய பொறுப்பு இருப்பதை உணர வேண்டும்.

உயர்கல்வி கற்பது, பணம் பண்ணுவதற்காக மட்டுமல்ல. பணம் மட்டுமே குறிக்கோள் என்றால் அதற்கு வழிகள் பல உள்ளன. அதையும் தாண்டி, சமுதாய நலனை சிந்திப்பவர்களாக படித்தவர்கள் விளங்க வேண்டும். ஆனால் இன்று உயர்கல்வி பயிலச் சென்ற மாணவர்கள் பலரிடம் காணப்படுகின்ற ஒழுங்கீனமான, கட்டுப்பாடற்ற செயல்கள் அச்சமூட்டுபவையாக உள்ளன. கல்லூரிப் பருவம், மகிழ்ச்சியானப் பருவம். ஆனால் எது மகிழ்ச்சி? என்பதுதான் இவர்களில் பலருக்குப் புரிவதில்லை. உயிரை மாய்க்கும் அளவுக்கு களியாட்டங்களில் ஈடுபடு வது மகிழ்ச்சி தரும் செயலாக இருக்க முடியாது.

சுயக்கட்டுப்பாடு என்பது ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டிய அடிப்படைப் பண்பாகும். அது, தானே வரவேண்டும். இவ்வளவு பெரிய நாட்டில் சட்டம் போட்டு அரசாங்கம் அதை ஏற்படுத்திவிட முடியாது.

சுயக்கட்டுப்பாடு இல்லாமல், எது செய்தாலும் சரிதான் என்னும் மனப்போக்கில் மாணவர்கள் இருப்பார்களேயானால், படித்து முடித்துப் பின்னர் பணியில் சேரும்பொழுது, அவர்களால் நாட்டில் எந்த முன்னேற்றமும் ஏற்படப் போவதில்லை.

உயர்கல்வி கற்பவர்கள் தங்கள் கடமையுணர்ந்து, கல்லூரி வாழ்க்கையில் எது உண்மையான மகிழ்ச்சி என்பதறிந்து, கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்வதுதான் அவர்களுக்கும், அவர்களை நம்பியிருப்பவர்களுக்கும், இந்த சமுதாயத்துக்கும் நன்மை பயக்கும்.



கடமையும், கட்டுப்பாடும் கற்றவர்களின் இரு கண்கள்!

......அன்புடன் ஆசிரியர்

## நெஞ்சமே அஞ்சாதே நீ! டாக்டர். எம்.எஸ்.உதயமூர்த்தி

காரியங்களைத் தள்ளிப் போடும்போது கவலை ஏற்படுகிறது. காரியம் செய்யாமலிருக்கக் கவலை ஒரு சாக்காக உதவுகிறது. காரியங்களைச் செய்யும்போதோ மனப்பாரம் குறைகிறது. ஆகவே செயலில் ஈடுபடுங்கள். கவலை பறந்து போகும்.

ஒரு மனிதன் தன் கவலைகளை எல்லாம் எண்ணிப் பார்த்து தற்கொலை செய்துகொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்கு வந்தான். ஆற்றுப் பாலத்தின் மீது நின்று ஆற்றில் குதித்து உயிர்விடத் தயாரானான். அந்த வழியே வந்த வழிப்போக்கன், அவனை இடைமறித்து, “ஏன் ஆற்றில் குதிக்கிறாய்?” என்று கேட்டான். அவன் தன் பிரச்சனைகளையெல்லாம், கவலை களையெல்லாம் கூறியபோது வழிப்போக்கன் கூறினான். “என்னுடைய கவலைகள் உன்னுடைய கவலைகளைவிடப் பத்துப் பங்கு அதிகம். ஆக நான்தான் முதலில் தற்கொலை செய்து கொள்ள வேண்டும் நீ இந்தப் பக்கம் வா. முதலில் நான் குதிக்கிறேன்” என்று ஆற்றில் குதித்தானாம்.

அவன் நீந்தத் தெரிந்த மனோதத்துவ வல்லுனனாக இருக்க வேண்டும்!

வீட்டுக்கு வீடு வாசற்படி என்கிறார்களே, அந்தத் தத்துவத்தை நாம் கவலைப்படும்போது நினைத்துக் கொள்ள வேண்டும். ஏதோ உலகில் கடவுள் நம்மை மட்டுமே தேர்ந் தெடுத்து எல்லாத் துன்பங்களையும் நமக்கு அளித்து விட்டாற்போல் எண்ணுவது மடமையாகும்.



நெருக்கடியான மனநிலை, கவலையாக மாறாமல், நம்பிக்கையுடன் தீர்வைக் காண முயல வேண்டும். நம்மை நாமே சித்திரவதை செய்துகொள்ளக் கூடாது.

## யார் செய்வார்? முனைவர்.லெ.பாஸ்கர்

ஊர்த்தலைவர் ஒருவர் ஒருநாள், தன் ஊர்மக்களின் பொதுநல மனப்பான்மையைச் சோதிக்க எண்ணினார். அதன்படி யோசித்து ஒரு முடிவுசெய்து இரவோடு இரவாக அந்த ஊரின் முதன்மைச் சாலையின் நடுவே ஒரு பாறாங்கல்லை வைத்துவிட்டு வந்தார். விடிந்தவுடன் யாராவது அந்தக் கல்லை எடுத்து ஓரமாக வைப்பார்களா என்று மறைந்திருந்து கவனித்தார். அந்த வழியாகச் சென்ற பலரும் அந்தக் கல்லைப் பார்த்து எரிச்சலடைந்தார்கள், கோபப்பட்டார்கள்.

“எவ்வளவு இடைஞ்சலாக இருக்கிறது இந்தக்கல்.? ஊராட்சி என்ன செய்கிறது?” என்று குறைபட்டுக் கொண்டார்கள். யாரும் அந்தக் கல்லை அப்புறப்படுத்த முன்வரவில்லை.

அப்பொழுது அந்த வழியாக ஓர் ஏழைக் குடியானவன் வந்தான். வயலில் வேலை செய்து விட்டுக் களைப்புடன் வந்தான். அவன் அந்தக் கல்லைப் பார்த்தான். “அடடா! இந்தக் கல் எல்லோர்க்கும் சிரமத்தைக் கொடுக்கிறதே!” என்று நினைத்து தன் உடல் சோர்வையும் பொருட்படுத்தாமல் அதைத் தூக்கி ஓரமாக வைத்தான். என்ன ஆச்சரியம் அந்தக் கல்லின் அடியில் ஒரு தங்க நாணயமும், ஒரு கடிதமும் இருந்தது.

அந்தக் கடிதத்தில், “உன் நல்ல மனசுக்குப் பரிசு இது. மனிதன் தான் வாழும் காலத்தில் பிறர்க்கு சேவை செய்யும் மனப்பாங்குடன் வாழ வேண்டும் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு நீ! உன்னுடைய செயல் மற்றவர்களுக்குச் சொல்ல வேண்டிய ஒரு செய்தியாகும். ஊர்மன்றத்தில் உனக்கு விரைவில் பாராட்டுவிழா நடத்தப்படும்” எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. குடியானவனின் உடல்சோர்வு மறைந்தது. ஊர்த்தலைவர் மனநிறைவுடன் திரும்பிச் சென்றார்.



## நுழைவாயில்.

ஓர் ஆணும்,பெண்ணும் வாழ்க்கையில் இணைகின்ற திருமண நிகழ்வுதான் இல்லறத்தின் நுழைவாயில் - தோரணவாயில். திருமணம் என்னும் அந்த நுழைவாயிலில் நுழைவதில்தான் எப்பேர்பட்ட அனுபவங்கள்!. மனித சாதிக்குள்தான் திருமணம் என்றால் கூட, அவரவர் இனப் பொருத்தம், அதற்குள்ளே கிளைப்பொருத்தம் பார்ப்பது முதற்கொண்டு, பணம் - பொருள் முதலான வணிகப் பொருத்தம் பார்ப்பது வரை விதவிதமான அனுபவங்கள்!. அதனூடே ஜாதகப் பொருத்தம் என்ற ஒன்று தலைதூக்கிப் பயமுறுத்தும். பகுத்தறிவாளர், முற்போக்குச் சிந்தனை யாளர் என்று சொல்லிக்கொள்பவர்கள் கூட, மௌனமாக இணங்கி தலையாட்டி விடுவதுண்டு. சில சமயங்களில் இருவரின் குணப்பொருத்தம், மனப்பொருத்தம் கூட கவனத்தில் கொள்ளாமல் பின்னுக்குத் தள்ளப்படுவதுண்டு. திருமணம் செய்வது எதற்காக என்ற அடிப்படைப் புரிதல் இல்லையோ என எண்ணுமளவுக்கு சில காட்சிகள் திருமணம் பேசும் காலங்களில் அரங்கேறுவதுண்டு.

தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் "இல்லறம்" என்னும் சமூக நிலைப்பாட்டியலை நாம் மூன்று காலக்கட்டங்களாகப் பிரித்துப் பார்க்கலாம். மனித நாகரிகம் முழுமையாக வளர்ச்சியுற்று விளங்கிய தொடக்க காலக்கட்டத்தில், அதாவது சங்க காலம் எனப் பொதுவாக எடுத்துக் கொள்ளலாம். அந்தக் காலத்தில் தமிழர்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் நில இயலின் அடிப்படையில் பல்வேறு குழுக்களாக வாழ்ந்து வந்தார்கள்.அவர்களுக் கென்று ஒரு பண்பட்ட, கட்டுக்கோப்பான வாழ்க்கை முறை இருந்தது. சமூகத்தில் பெண்கள் பெரிதும் மதிக்கப்பட்டார்கள் ; எல்லா நிலைகளிலும் அவர்கள் ஆண்களுக்குச் சமமாக, சுதந்திர மாக வாழ்ந்தார்கள்; கல்வியில் மேம்பட்டு விளங்கினார்கள்; பெண்பாற் புலவர்கள் பலர் இருந்தனர்; உழைத்துப் பொருளீட்டினார்கள். பெண்கள் அடக்குமுறையின்றி, உரிமையுடன் வாழ்ந்த காலம் என்றால் அது சங்க காலம்தான்! இவற்றையெல்லாம் நாம் சங்க இலக்கியம் வாயிலாக அறிய முடிகிறது.

அப்படிப்பட்ட சங்க காலத்தில் இல்லறம் எப்படி இருந்தது? இனித்ததா? கசந்ததா? அல்லது இரண்டும் கலந்திருந்ததா?

குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்

என்ற அய்யன் திருவள்ளுவரின் வாய்மைமொழியை அளவுகோலாக வைத்துப் பார்த்தால், சங்க காலத்தில் இல்லறம் இனித்தது என்றே சொல்ல வேண்டும். ஒரு பெண் தன் மணவாளனைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை அன்று பெற்றிருந்தாள் என்றால் இனிக்காதா என்ன ?

.......................................................தொடரும்

**தமிழ் அறம் மின்னிதழ்**
**வெளியிடுபவர் : மருத்துவர்.த.இராசலிங்கம். MBBS.,Dip.Diab**
**4/16, இராம் நகர். தூத்துக்குடி.**

# சங்க இலக்கியத்தில் உவமையழகு
# கலித்தொகை -- முல்லைக்கலி

**நல்லுருத்திரனார்** செய்தருளியது முல்லைக்கலி. காடும், காடு சார்ந்த இடமுமான முல்லை நிலத்து ஆயர் குடியினரின் அகவாழ்வினை அடிப்படையாகக் கொண்டு, பழந்தமிழரின் மறமாண்பைக் காட்டுவது முல்லைக்கலி. இன்று நாம் கொண்டாடும் ஜல்லிக் கட்டு எனப்படும் **ஏறுதழுவதலின்** களம் முல்லையாகும். அன்று ஆயர்குலப் பெண்ணொருத்தியை ஆயமகன் காதலித்துத் திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்றால், அவன் ஏறுதழுவ வேண்டும். அதாவது காளையை அடக்க வேண்டும்.

ஏறுதழுவும் களத்தில் முரசறைந்து அறிவிப்பு செய்யப்படுகிறது. எப்படி உள்ளது அந்த அறிவிப்பு ?

இஃது ஓர் வெள்ளை நிறமுடைய எருது, இதன் கழுத்தை அணைத்து அடக்குபவன், முள் போன்ற பற்களையுடைய அழகியான இவளை மனைவியாக அடைவான். கூரிய கொம்பினை உடைய, சினத்துக்கு அஞ்சாத கரிய எருதினை அடக்குபவன், ஒளி பொருந்திய கூந்தலை உடைய இப்பெண்ணோடு துயிலுகின்ற பேற்றினைப் பெறுவான். இதோ இந்த கொலைக் குணத்தையுடைய ஏற்றைத் தழுபவன், பெண்மான் கண்களையொத்த கண்களையுடைய இந்த நல்லவளைப் பெறுவான், கொடிய வலிமையுடைய செவலை எருதை அஞ்சாது அடக்குபவன், வரி பொருந்திய குழையும், மூங்கில் போன்ற தோளும் உடைய இவளை மணப்பான்.

இவ்வாறு அறிவிப்பு செய்து, நிலவை விண்மீன்கள் சூழ்ந்திருப்பது போல் தோழிகள் சூழ, மகளிரை பரண்களிலே அமரச் செய்வர்.

**அவ் வழி, முள் எயிற்று ஏர் இவளைப் பெறும், இது ஓர்**
**வெள் ஏற்று எருத்து அடக்குவான்**
**ஒள்ளிழை வாருறு கூந்தல் துயில் பெறும், வை மருப்பின்**
**காரி அதன் அஞ்சான் கொள்பவன்- ஈர் அரி**
**வெரூஉப் பிணை மான் நோக்கின் நல்லாட் பெறூஉம், இக்**
**குரூஉக் கண் கொலை ஏறு கொள்வான்- வரிக் குழை**
**வேய் உறழ் மென் தோள் துயில் பெறும், வெந் துப்பின்**
**சேஎய் சின்ன் அஞ்சான் சார்பவன்- என்று ஆங்கு**
**அறைவனர், நல்லாரை, ஆயர் முறையினால்,**
**நாள்மீன் வாய் சூழ்ந்த மதி போல், மிடைமிசைப்**
**பேணி நிறுத்தார் அணி.**

ஏறுதழுவுதல் நிகழ்வின் அறிவிப்பைக் கேட்டவுடன், காதலியர் நெஞ்சம் படபடவெனத் துடிக்கும், காதலரோ தினவெடுக்கும் தோள்களோடு களம் புகுந்து காளைகளை எதிர்கொள்வர்.

....உவமையழகு தொடரும்

**மரு.த.இராசலிங்கம்**







## தூத்துக்குடி மாவட்ட மக்கள் சக்தி இயக்கம் பனங்கொட்டை ஊன்றும் நிகழ்வு

21.12.2025 அன்று தூத்துக்குடி மாவட்ட மக்கள் சக்தி இயக்கம் சார்பாக கோரம்பள்ளம் குளம் உடைப்பு ஏற்பட்ட பகுதியில் மண் அரிப்பு ஏற்படாமல் இருக்க, பனங்கொட்டைகள் ஊன்றப் பட்டன. மாவட்டச் செயலாளர் கந்தசாமி தலைமையில் கிராம மக்கள் பங்களிப்புடன் இந்நிகழ்வு நடைபெற்றது. இதில் மாவட்டப் பொருளாளர் வன்னியராஜ், இணைச்செயலாளர் சந்தானராமகிருஷ்ணன், பண்பாளர்கள் நவநீதன், முத்துக்குமார், சுரேஷ், பெருமாள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.





## தஞ்சை மாவட்ட மக்கள் சக்தி இயக்கம் மரக்கன்றுகள் நடும் விழா

பாரதியாரின் 143 வது பிறந்தநாளை முன்னிட்டு 143 மரக்கன்றுகள் நடும்விழா மருத்துவக் கல்லூரி சாலை அருகே உள்ள பல்லவன் நகரில் பன்னாட்டு அரிமா சங்கங்கள், தஞ்சை எலைட் அரிமா சங்கம், தஞ்சை ஏ.எம்.சி அரிமா சங்கம், தஞ்சை மக்கள் சக்தி இயக்கம் சார்பாக 14.12.2025 அன்று நடைபெற்றது. மாநிலப் பொதுச்செயலாளர் முனைவர்.பாஸ்கரன், மாவட்டச் செயலாளர் முனைவர். முருகானந்தம், மாவட்ட ஆலோசகர் பண்பாளர் மதியரசன் மற்றும் அரிமா சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

2025 மதுரை பொதுக்குழுவில் அறிவித்தபடி மக்கள் சக்தி இயக்கம் இந்த ஆண்டை சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆண்டாகக் கடைப்பிடித்து அது தொடர்பான மரக்கன்று நடுதல், பனங்கொட்டை ஊன்றுதல் போன்ற ஆக்கப்பூர்வமானப் பணிகளை மாவட்டம் தோறும் மேற்கொண்டு வருகிறது. பூமித்தாயைக் காக்க தயைகூர்ந்து ஒருமுறை மட்டுமே பயன்படுத்தி விட்டுத் தூக்கி எறியும் நெகிழிப்பைகள், தட்டுகள், குவளைகளைப் பயன்படுத்தாதீர்கள். பொருள் வாங்க கையில் துணிப்பை அல்லது சணல் பைகளை எடுத்துச் செல்லுங்கள். சுற்றுச் சூழலை மாசுபடுத்தும் செயலைச் செய்யாதீர்கள்!.

## குற்றவாளிகள்

எலும்பாலும்
சதையாலும்
செய்யப்பட்டு...

நரம்பாலும்
இரத்தத்தாலும்
பின்னப்பட்டு...

செஞ்சிந்தனைகள்
ஊட்டப்பட்டு...

புரட்சித்தீயே
திசைகாட்டு!

பாடங்களை
பரிசீலிக்கட்டும்!

அறவுரைகள்
சீர்செய்யட்டும்!

அறிவுரையாய்
பெட்டகங்கள்!

மறுவடிவம்
மக்கிய ஓவியம்!

புலம்பல்களில்
புற்றீசல்!

குற்றங்கள்
நியதியா?

பூக்களில்
புழுக்கள்!
கவிஞர்.கலியுகன் கோபி. சென்னை

## வாக்குரிமை

மக்களாட்சி நாட்டில்
மக்களே அடிமையா?

ஏழையின் வாழ்வாதாரம்
கோழையாய் மாறலாமா?

துயரத்தில் மூழ்காமல்
உயரம் தாண்டுவோமே!

உரிமை உரிமையென
ஓங்காரம் முழங்குவீரே!

கிடைத்த வாக்குரிமை
அடகு வைக்கலாகுமோ?

நாட்டுநலம் நாடியே
வாக்களிக்க வேண்டாமா?

ஒவ்வொரு ஐந்தாண்டும்
ஒவ்வொரு பாடந்தானே!

கற்றிட்ட வழியறிந்து
முற்றிலுமாய் முயல்வோமே!

ஜனநாயக ஆட்சியில்
பணநாயகன் பிரதானமா?

வலைவீசி வாக்குரிமை
விலையானால் ஏற்கலாமோ?

கவிஞர்.ஆசிரியர் க.தேவிகா
தூத்துக்குடி